மலர் 2 இதழ் 2 அக்டோபர் 2017 ISSN – 2454-3993

# ஐங்குறுநூற்றில் மந்திரச்சடங்குகள்

**ச. ஸ்ரீதர்**
**முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை**
**பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி**
**கோயம்புத்தூர்**

**முன்னுரை**

பிரபஞ்சத்தில் வாழ்கின்ற மனிதன் அவனுடைய பிறப்பு முதல் இறப்பு வரை மட்டும்மல்லாமல் இறப்பிற்கு பின்பும்கூட மனிதனுக்குப் பல்வேறு வகையான சடங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன மனிதன் இறந்த பின்பும் அவனுக்காக நடத்தப்படும் ஒவ்வொரு சடங்கின் பின்னணியிலும் ஏதோவொரு காரணகாரியம் இருந்து வருகின்றது. அவ்வகையில் ஐங்குறுநூற்றில் மந்திரச்சடங்குகள் எவ்வாறு இடம் பெற்றிருக்கிறன என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**சடங்குகளின் பெயர்காரணம்**

சடங்குகள் என்பதற்கு 'ட் அங்கங்கள் என்று தேனி எஸ் மாரியப்பன் தனது ஆன்மீக குறிப்பு என்ற நூலில் கூறுகிறார்'' 'ட் அங்கங்கள்" என்பது

**"சிட்சை = எழுத்தியல்**
**வியாகர்ணம் = சொல்லியல்**
**நிறுத்தம் = பொருளியல்**
**கல்பம் = செயல்முறை**
**சந்தஸ் = யாப்பு**
**ஜ்யோதி'ம் = ஜோதிடம்" (ஆன்மீக குறிப்புகள் - ப.98)**

என்கிற ஆறு அங்கங்களையும் கொண்டு நடைபெறும் செயல்களை 'ட் அங்கங்கள் ('ட் = ஆறு) என்று முன்னோர் கூறிவந்தனர். இதுவே நாளடைவில் மறுவி சடங்குகள் என்று ஆகிவிட்டது.

**சடங்குகள் என்ற சொல்லிற்குப் பொருள்**

சடங்கு என்ற சொல்லுக்கு "சட்ட" என்ற உரிச்சொல் வேர்ச்சொல் ஆக பயன்படுகிறது. 'அம்'என்ற சொல் அழகியது என்று பொருள்படுகிறது. 'கு' என்பது தன்மையைக் குறித்த விகுதி ஆகும். பண்பு + அம் + கு ஸ்ரீபாங்கு என்று மறுவியது போல சட்ட + அம் + கு ஸ்ரீசடங்கு என்று மறுவி வந்ததாக எஸ்.மாரியப்பன் கூறுகிறார்.

**"சட்ட நேர்பட வந்தி லாத**
**சுழக்க னேன் உனைச் சார்ந்திலேன்" (திருவாசகம் - ப.216 )**

என்று மணிவாசகர் கூறுகிறார். ஓர் ஒழுங்கு முறைக்கு உட்பட்டுவராத மனிதன் நான் ஆகையினால் பெருமானே உன்னைச்சார்ந்து பயன்பெற வேண்டும் என்றும் அறிவில்லாதவன் 'சட்ட' என்ற இந்த வேர்ச்சொல்லை பழைய வழக்குச் செல்லாக மணிவாசகர்

திருவாசகத்தில் பயன்படுத்தியிருக்கிறார். எனவே சடங்கு என்றால் வாழ்வின் முக்கியமான நிகழ்வுகளைச் செவ்விதமாக ஓர் ஒழுங்கு முறையாகவும் ஆழமாகச் செயவிக்கும் தன்மை உடையது என்று கருதப்படுகிறது.

**சடங்குகளின் வகைகள்**

சடங்குகள் நான்கு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவை:

**வாழ்க்கை வட்டச் சடங்குகள்**

**வழமைச் சடங்குகள்**

**வழிபாட்டுச் சடங்குகள்**

**மந்திரச் சடங்குகள் (ஆன்மீக குறிப்புகள் ப.107)**

மனிதன் இயற்கையிடமிருந்து ஏதோ ஒருவகையான பலன்களைப் பெறுவதற்காகவே இம்மாதிரியான மந்திரச் சடங்குகளை செய்து வருகிறான். மனிதன் இறைவனுக்கு செய்கின்ற செயல்களில் பலன் கிடைக்கவும் மற்றும் இயற்கை சீற்றங்களில் இருந்து தப்பிக்கவும் மட்டுமல்லாமல் இயற்கையைக் கட்டுப்படுத்தவும் இம்மந்திரச்சடங்குகள் செய்யப்பட்டன.

“நாம் செயல்புரிந்து அதுபோலச் செயல்புரிய இயற்கையினைத் தூண்டுவதே அதன் செயல்பாடாகும்”. என்று பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் என்ற நூலில் க. கைலாசபதி கூறுகிறார். மனிதன் தன்னுடைய சக்தியை அடிப்படையாகக்கொண்டு தனக்குப் புறம்பாக உள்ள இயற்கையிலும் அதே சக்திகளைக் கொண்டு அவற்றை உபயோகித்து அடக்கக் கண்ட கருவி மந்திரம் என்பதனை லின்ஸே தெளிவாக விளக்கியுள்ளார்.

மந்திரங்களின் மூலமாக தேவைகளைச்“சுவாதீனம் செய்தல் இயற்க்கையை கட்டுப்படுத்துதல் பகைவரை அழித்தல், நோயை அகற்றுதல்பொருள் சம்பாதித்தல் அகியவற்றை அடையலாமென மக்கள் நம்புகின்றனர்” (கேரளத்தில் மந்திரம் ப.12)

வேதம், மறைபொருள்கொண்டு, ரகசியமாக பஞ்சபூதங்கள் பெயர்களின் முதல் எழுத்துக்களைச் சேர்த்து உண்டாக்கித் தெய்வசக்தி கொண்ட சொற்களைத் தான் மந்திரம் எனச்சுட்டுவதாக வி.எச்.எஸ் சாஸ்திரி கூறியிருக்கிறார். தமிழிலக்கியத்தில் மந்திரத்தை உச்சரிப்பதன் மூலம் பயன்பெற்ற நிலைமைகளையே பார்க்க முடிகிறது.

**“நிறைமொழி மாந்தர் ஆனையிற் கிளக்கும்**
**முறைமொழி தானே மந்திரம் என்ப” (தொல்-பொருள்-நூ.480)**

நிறைந்த மொழியையுடைய மாந்தர் தமதாணையாற் சொல்லப்பட்ட மறைந்த சொல் மந்திரமாவது என்று தொல்காப்பியர் கூறுகிறார். கடவுட் பேணுவோர் இதனை முழக்கி இறைவனைப் பரவுதல் செய்வர். மந்திரத்தைக்கொண்டு தொழிலாற்றுவோர் மந்திரமாக்கள்.

**“ஈற்றிளம் பெண்டி ராற்றப் பாலகர்**
**கடுஞ்சூள் மகளிற் நெடும்பு ணுற்றோர்**
**தந்துயர் கெடுக்கு மந்திர மாக்கள்**
**மன்றப் பேய்மகள் வந்துகைக் கொள்கென**
**நின்றெறி பலியி னெடுங்குர லோதையும்” (மணி 7:81-85)**

ஈன்ற இனிமையுடைய இளம்பெண்கள் ஆற்றச் சிறுவனிடம் மற்றும் முதற் சூலையுடைய பெண்களிடமும் பெரிய புண்கள் இருப்பதினால் துன்பப்படுகின்றனர். இவர்களின் துன்பங்களை போக்குகின்ற மந்திரவாதிகளோ மன்றத்தின் உள்ளே இருக்கின்ற பேய்கள் வந்து

அவர்களின் துன்பத்தினைப் பெறுக என்று கூறி எறிகிற நெருப்பில் பலியினைக் கொடுத்து நீண்ட குரல் முழக்கத்துடன் கத்துகிறான்.

இயற்கையிடமிருந்து பலன்களைப் பெறுவதற்காகச் சில சடங்கு முறைகள் நிகழ்த்தப்பட்டதைச் சங்க இலக்கிய நூலான ஐங்குறுநூறு பதிவு செய்கிறது.

**“குன்றக் குறவ னார்ப்பி னெழிலி**
**நுண்ப லழிதுளி பொழியு நாட” (ஐங்-பா-251)**

மலைகளிலே வாழ்கின்ற குறவனுக்கு அவன் விளைவிக்கும் திணை முதலிய பயிர்களுக்கு நீர் தேவைப்படுகிறது. அந்நீரானது மழை பெய்தால் மட்டுமே அக்குறவனுக்கு கிடைக்கப்பெறும். அதனால் அக்குறவன் மழை வேண்டி வருண பகவானிற்கு மந்திரச்சடங்கை நிகழ்த்துகிறான். அம்மந்திரச்சடங்கானது வேள்விகளாகிய மந்திரங்கள் முழங்கி முரசுகள் ஒலிக்க ஆரவாரம் செய்து மழையை பெறுகிறான்.

**“குன்றக் குறவன் கடவுட் பேணி**
**பிரந்தணன் பெற்ற வெள்வளைக் குறுமக” (ஐங்-257)**

என்ற நூற்ப்பாவில் மலைகளிலே வாழ்கின்ற குறவன் தனக்கு நெடுங்காலமாக பெண் மகப் பேறின்மையால் மலைகளிலே இருக்கின்ற கடவுளாகிய முருகப்பெருமானிற்கு மந்திரச்சடங்குகள் நிகழ்த்தி வரமிருந்து முருகப்பெருமானின் அருளாளே ஒரு குறுமகளைப் பெறுகின்றான். இதன் மூலம் மந்திரச்சடங்கு நிகழ்த்தி குறவன் பெண்மகப்பேறினைப் பெற்றெடுத்ததைக் காணமுடிகிறது.

**“மன்ற வேங்கை மலர்சில கொண்டு**
**மலையுறை கடவுள் குலமுதல் வாழ்த்தித்” (ஐங்-299)**

மலைகளிலே வாழ்கின்ற குறவன் மன்றத்தின்கண் இருக்கின்ற வேங்கை மலர்கள் சிலவற்றைப் பறித்து மலைதோறும் எழுந்தருளியிருக்கின்ற முருகக் கடவுளாகிய அவனுடைய குலதெய்வத்திற்கு மந்திரச்சடங்குகளின் மூலம் வேங்கை மலர்களைக் கொண்டு வழிபாடு செய்கிறான்.

## முடிவுரை

மனிதன் பிறந்தது முதல் இறந்தது வரை என அனைத்திலுமே சடங்குகள் நிறைந்திருக்கின்றன. சடங்குகளை வாழ்க்கை வட்டச்சடங்குகள், வழமைச்சடங்குகள், வழிபாட்டுச் சடங்குகள், மந்திரச்சடங்குகள் என்று நான்கு வகைகளாக பிரிக்கலாம். ஐங்குறுநூற்றில் மந்திரச் சடங்குகளின் மூலம் குறவன் விளைவித்த திணைகளுக்கு மழை வேண்டியும் தனக்கு நெடுங்காலமாக மகப்பேறு இல்லாதபோது பெண்மகப்பேறு கிடைக்கும்படியும் மலையுறைக் கடவுளாகிய அவனுடைய குலதெய்வத்திற்கு மந்திரச் சடங்குகள் நடைபெற்றதை அறிய முடிகிறது.